Vilathurai Lift Irrigation Scheme

*695 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have any proposal to dismantle and remove the machines installed for Vilathurai Lift Irrigation Scheme?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

மு.ப. 9-30

திரு. என். டென்னிஸ்: இதை மாற்றுமல் அங்கே இயங்க வைத்தால் வரட்சிக் காலங்களில் நீர்ப்பாசனத்திற்கு உபயோகமாக இருக்கும். இன்னும் குடி தண்ணீர் திட்டத்திற்கான ஒரு திட்டமும் முன்பு வைக்கப்பட்டிருக்கிறது. குடி தண்ணீர் திட்டத்திற்கும் வரட்சிக் காலங்களில் விவசாயிகளுக்கு உபயோகமாக இருப்பதற்கும் இந்த இயந்திரங்களை அங்கே மாற்றுமல் இயங்க வைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த ஆயக்கட்டிலிருந்த பூமிகள் சிற்றாறு—பட்டணங்கால் திட்டத்தின்கீழ் பயன்பட்டு வருகின்றன. இந்த இயந்திரங்களை குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மாற்றுவதற்காக ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது.

Bridge across Kushastali

*696 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to construct a bridge across the river "Kushastali" on Tiruthani-Nagalapuram Road; and

(*b*) if so, when the work will be taken up?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ): இந்தப் பால வேலையை எடுத்துக் கொள்வது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: சென்ற பட்ஜெட் கூட்டம் முடிந்தபிறகு இந்த வேலைக்கான ஒப்புதலை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அது ஓர் ஆண்டு காலமாகியும் இதுவரையில் மத்திய அரசு அதற்கான ஒப்புதலைக் கொடுக்க வில்லை. இது மட்டுமல்ல, எந்தத் திட்டத்தை அனுப்பினாலும், மத்திய அரசின் ஒப்புதல் பெறுவதற்கு ஓராண்டு, இரண்டு ஆண்டுக் காலம் ஆகிறது. ஆகவே, மத்திய அரசை வற்புறுத்தி, இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை விரைவிலே பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?